2006 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிக்-குன்-குன்யா என்ற நோயைப் பரப்புகின்ற கொசுவினைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நல்ல பல கருத்துகளை இங்கே சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத துறை அமைச்சர் அவர்களும், இந்த அரசு பல்வேறு வகையான நடவடிக்கைகளை, கொசு ஒழிப்பதற்கு எடுத்துக்கொண்டிருக்கிறது; பொதுமக்களுடைய பங்களிப்பும் இதில் இருக்க வேண்டும் என்ற தொனியில் இங்கே அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இந்தக் கொசுவைப் பிடிப்பதற்கு பொதுமக்கள் அனைவருக்கும் கொசு வலை கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயாராக இருக்கின்றார்களா என்பதைத் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கொசு வந்ததற்குப் பிறகு கடிக்காமல் இருப்பதற்குக் கொசு வலையைக் கேட்கிறார்கள். நாங்கள் சொல்வது, கொசுவே வராமல் இருப்பதற்கு, ஒழிப்பதற்கு வேண்டிய பணிகளைச் செய்வதற்கு உங்கள் உதவியைக் கேட்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 116. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

116—

கோயில் தேர்

***502—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் ஆலயத்தின் தேர், பழுது நீக்கம் செய்யப்பட்டு, மீண்டும் தேரோட்டம் நடத்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 ஆகஸ்ட் 29

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் அருள்மிகு வேதாரண்யேஸ்வரார் ஆலயத்தில் இருந்த ஐந்து தேர்களும் பழுதடைந்துவிட்டன. இதில் பிரதானத் தேரினை மட்டும், முதல் கட்டமாகப் பழுதுநீக்கம் செய்து, மீண்டும் தேரோட்டம் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனுடைய உத்தேச மதிப்பீடு, ரூபாய் 10 இலட்சம். இந்தப் பணியினை ஓராண்டிற்குள் முடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முற்பகல் 10—20

திரு. எஸ்.கே. வேதரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தேர், கிட்டத்தட்ட 47 ஆண்டுகளாக ஓடாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதில் ஏராளமான மரச் சிற்பங்கள் எல்லாம் பத்திரமாக இக்கிறது. எனவே, 5 தேர்களையுமே தற்பொழுது பழுது நீக்கம் செய்து ஓட்டுவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அரசு முழு மானியத்துடன் இந்த ஆண்டே இந்தத் தேரைச் சீர்செய்து ஓட்டுவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்தத் திருக்கோயிலுக்கு 5 தேர்கள் உண்டு. அவற்றிலே, 1959 ஆம் ஆண்டில் நடைபெற்ற தீ விபத்தில் ஒரு தேர், பிரதான தேர் எரிந்துபோய் இருக்கிறது. இருந்த 4 தேர்களைக் கொண்டு, இறுதியாக 1959 ஆம் ஆண்டில்தான் முழுத் தேரோட்ட நிகழ்ச்சிகளும் நடைபெற்று இருக்கின்றன. தொடர்ந்து நடைபெறாமல் இருந்திருக்கின்றது. ஆகவே, அத்தனை தேர்களையும், எஞ்சியிருக்கக்கூடிய 4 தேர்களையும், புதிதாகச் செய்துதான், அந்தத் தேரோட்டத்தை நடத்த வேண்டியிருக்கிறது. அத்தனை தேர்களையும் ஒரே நேரத்தில் செய்வதற்கு நிதி ஆதாரங்கள் சரி செய்யமுடியாத காரணத்தால், படிப்படியாக முதலிலே ஒரு தேரையும், பிறகு எஞ்சியிருக்கக்கூடிய 4 தேர்களையும் செய்வதற்குத் துறையில் ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2006 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் விஷ்ணுபிரசாத்.

டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையில் வருகின்ற காரணத்தினால், இந்த வினாவினை எழுப்புகிறேன். கடந்தகால ஆட்சியிலே தமிழகத்திலே கிட்டத்தட்ட 30 ஆயிரம் கோயில்களில், 3 ஆயிரம் கோயில்களுக்கு இலவசமாகத் தலப் புராணப் புத்தகம் அச்சிட்டு, வெளியிட்டு அந்தந்தக் கோயில்களிலே வைக்கப்படும் என்ற ஓர் அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். அது எந்த அளவிற்குச் செயல்முறையில், நடைமுறையில் இருக்கிறது என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். ஏனென்றால், நான் எந்தக் கோயிலுக்குச் சென்றாலும், அங்கே அரசாங்க சார்பிலே இலவசமாகத் தலப் புராணத்தை என்னால் பார்க்க முடியவில்லை, அதற்குத் தகுந்த விளக்கத்தைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் அறிவித்த திட்டங்களைச் செய்யவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் விஷ்ணுபிரசாத் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அதனைத் தமிழக மக்களும் அவ்வாறே கருதுகிறார்கள். ஆனால், இப்பொழுது தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் பொறுப்பேற்றிருக்கக்கூடிய இந்த அரசு, சொன்னதைச் செய்யக்கூடிய அரசாக, நான் ஏற்கெனவே என்னுடைய மானியக் கோரிக்கையில் குறிப்பிட்டதைப்போல, தல வரலாறுகள் ஆங்காங்கு தயாரித்து வெளியிடுவதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன. வெகுவிரைவில் அவை கிடைக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன்.

திரு. பி.என். பெரியண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதி, அலேபுரம் என்ற கிராமத்திலே, திப்புசுல்தான் காலத்தில் கட்டப்பட்ட நரசிம்மசுவாமி கோயில், பிரசித்திப் பெற்ற கோயிலாக விளங்கி வருகிறது. ஆனால், அப்போது அமைக்கப்பட்ட தேர் பழுதடைந்து, அந்தத் தேரைப் புதுப்பிக்க கடந்த ஆட்சியிலே 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அந்தப் பணம்

போதாது என்பதால், கூடுதலாகப் பணத்தை ஒதுக்கி, அந்தத் தேரைப் புதுப்பிக்க அரசு முன்வருமா என்று தாங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டிருந்தால் விவரமாகப் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும். இருந்தாலும்கூட தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மொத்தத் தேர்கள், துறைக்குச் சம்பந்தப்பட்ட தேர்கள், 830 தேர்கள் இருக்கின்றன. இவற்றிலே 521 தேர்கள் இப்பொழுது நல்ல நிலையில் இருக்கின்றன. பழுதுபார்ப்பதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ள தேர்களினுடைய எண்ணிக்கை 225. எஞ்சியவை சற்று மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதும் இருக்கலாம், அவையும் வெகுவிரைவிலே பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

117—

தரம் உயர்த்துதல்

1160*—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் கல்வி ஆண்டில், 100 அரசு மற்றும் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS